# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதலாம் வருட பொதுக் கலைமாணித் தேர்வு (வெளிவாரி) - 2004/05
## (ஒக்ரோபர்/நவம்பர் – 2006)

## TL 101 – தமிழ் இலக்கியமும் குறிப்பிட்ட பாடநூல்களும்

**நேரம்: 3 மணித்தியாலங்கள்**

**ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக 5 வினாக்களுக்கு விடை தருக.**

---

### பகுதி – I

1. அ. கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை தோன்றிய தமிழ் இலக்கியங்கள் "சங்க இலக்கியங்கள்" என்ற பெயர் பெற்றமைக்கான காரணம் யாது. விளக்குக.

   ஆ. அவ்விலக்கியங்களை வகைப்படுத்திப் பட்டியலிடுக.

   இ. அவற்றுள் புறத்திணை இலக்கியங்களின் பண்புகளைச் சுருக்கித் தருக.

2. அ. கி.பி. ஆறாம் நூற்றாண்டு தொடக்கம் ஒன்பதாம் நூற்றாண்டு வரை தோன்றிய இலக்கியங்கள் எவையெனக் கூறுக.

   ஆ. அவற்றின் அடிப்படைப் பண்புகளை வகைப்படுத்துக.

   இ. அப்பண்புகள் பின்வந்த சோழர் கால இலக்கியங்களில் தொடர்ந்த முறையை எடுத்துக்காட்டுக.

3. அ. இரண்டாவது பக்தியுகம் என விஜயநகர நாயக்கர் காலம் அழைக்கப்படுவதற்கான காரணம் யாது.

   ஆ. அக்காலத் தெழுந்த வேறுவகையான இலக்கியங்கள் யாவை.

   இ. அவ்விலக்கியப் பண்புகளில் எவை 19ஆம் நூற்றாண்டு இலக்கிய வளர்ச்சிக்கு ஆதாரமாய் அமைந்தன என்பதை உதாரணங்காட்டி விளக்குக.

4. 'இருபதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம்' என்ற தொடரால் நீர் விளங்கிக் கொள்வதென்ன என்பதை அவ்விலக்கியங்களின் காலப்பின்னணி, இலக்கிய வகைகள், முக்கியமான இலக்கிய கர்த்தாக்கள் என்பவற்றை அடிப்படையாக வைத்து ஆராய்க.

## பகுதி – II

5. பின்வரும் குறுந்தொகைச் செய்யுளை வாசித்து அதன் கீழ் வரும் வினாக்களுக்கு விடைதருக.

*கான மஞ்ஞை யறையீன் முட்டை*
*வெயிலாடு முசுவின் குருளை யுருட்டும்*
*குன்ற நாடன் கேண்மை* யென்றும்
நன்றுமன் வாழிதோழி யுண்கண்
நீரொ டொராங்குத் தணப்ப
உள்ளாதாற்றல் வல்லுவோர்க்கே.

1. பாடலின் உரையை எளிய நடையில் தருக.
2. தடித்த எழுத்தில் காணப்படும் தொடரின் அணியை விளக்குக.
3. இப்பாடல் எத்திணைக்கு உரியது

6. பாசத்துக்கும் நியாயத்துக்குமிடையே நிகழ்ந்த போராட்டத்தை கும்பகர்ணன் பாத்திரத்தின் கூற்றின் மூலம் அறியலாம். இக் கூற்றின் பொருத்தப்பாட்டை மதிப்பிடுக.

7. இளங்கோவடிகளின் கவிதைச் சிறப்பை ஆய்ச்சியர் குரவை முதல் வழக்குரை காதைவரையிலுள்ள பகுதி வெளிப்படுத்துமாற்றை விபரிக்குக.

8. நவீன கவிதையின் முன்னோடி எனப் பாரதி கொள்ளப்படுவதற்கான காரணங்களை **காட்சி, புதிய ஆத்திசூடி, புதுமைப் பெண், பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி** ஆகிய கவிதைகளை ஆதாரமாக வைத்து விளக்குக.